TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8073095

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம்: Salem | PS: காவல்நிலையம்: V & AC. | Year: ஆண்டு: 2019 | FIR No.: மு.த.அ. எண்: 4/AC/2019 | Date: நாள்: 14.03.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018. | Sections பிரிவுகள்: 7(a) of the Prevention of Corruption (Amendment Act 2018.
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 13.03.2019 | Date to : நாள் வரை 14.03.2019
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 16.00hrs | Time to : நேரம் வரை 01.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.3.2019 | Time நேரம் : 16.00hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14.3.2019 | Time நேரம் : 16.00hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer/ Typed written Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 5 km. Southeast.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி No.33600150108. Anganvadi Center. Muruganagar, Annathanapatty, Salem.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Srinivasan, | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Varadharajan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Deputy Inspection Cell officer, | (g) Address : முகவரி Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts, Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. T. Balambigai, Child Development project officer, Project-I, Salem
2) Tmt. M. Noorjahan, Anganvadi worker, Murugan nagar Anganvadi center, Annathanapatty, Salem.
3) Tmt. S. Shanti, Anganwadi Worker, Kiccmedu police Quarters Anganwadi Center, Salem.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 14/3/19 | [signature] 14/3/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.03.2019 – 18.00 hrs.

Name: பெயர் S. CHANDRAMOULI.
Rank: நிலை Additional Supdt. of Police, VAC. Salem. No. எண் ………

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2019 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12 ன் விபரம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 14.03.2019ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், துணை ஆய்வுக்குழு அலுவலர், திரு.V. சீனிவாசன் என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு. V.சீனிவாசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம். பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். அய்யா சேலம் மாநகராட்சி, அன்னதானப்பட்டி, வார்டு எண்.47 முருகன் நகர், இலக்க குறியிடு எண்.33608150108 கொண்ட அங்கன்வாடி மையத்தில் சேலம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் (திட்டம் – I) திருமதி.டி.பாலாம்பிகை, அவர்கள் தனது அதிகாரத்திற்குட்பட்ட 3 தொகுதிகளான மணக்காடு, கோட்டை மற்றும் அன்னதானப்பட்டி தொகுதிகளில் (sectors) இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களில் அன்னதானப்பட்டி தொகுதியில் உள்ள 45 அங்கன்வாடி மையங்களின் பணியாளர்களிடமிருந்து அந்தந்த அங்கன்வாடியில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவிற்காக செலவாகும் உணவூட்டு செலவின நிதியிலிருந்து மாதம் ரூ.500/– வரையும், மேற்படி 45 அங்கன்வாடி மையங்களில் வாடகை கட்டிடங்களில் இயங்கிவரும் 25 அங்கன்வாடி மையங்களுக்கு ஒதுக்கப்படும் கட்டிட வாடகை நிதியிலிருந்து மாதம் ரூ.1,000/– வரையும், அன்னதானப்பட்டி தொகுதியில் இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களுக்கு குரூப் லீடரும் அன்னதானப்பட்டி முருகன் நகர் அங்கன்வாடி பணியாளருமான திருமதி.M.நூர்ஜஹான் மற்றும் அன்னதானப்பட்டி லைன்மேடு காவலர் குடியிருப்பு அங்கன்வாடி மைய அங்கன்வாடி பணியாளர் திருமதி. S.சாந்தி ஆகிய இருவர் மூலமும் தனிப்பட்ட கமிஷனாக அன்னதானப்பட்டி முருகன் நகர் அங்கன்வாடி மையத்தில் வைத்து அங்கன்வாடி பணியாளர்களிடமிருந்து வசூல் செய்வதாக கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் 13.3.2019 மாலை சுமார் 4.00 மணி முதல 13/14.3.2019 இரவு 01.30 மணி வரை நான் மற்றும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து மேற்படி முருகன் நகர் அங்கன்வாடி மையத்தில் திடீர் சோதனை மேற்கொண்டோம். இந்த சோதனையின்போது மேற்படி அங்கன்வாடிமைய ஹாலின் மத்தியில் மேற்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த மேற்படி அங்கன்வாடி மைய பணியாளர் திருமதி. M.நூர்ஜஹான் அவர்களை விசாரித்ததில் அவர் அன்னதானப்பட்டி குரூப்பில் உள்ள 45 அங்கன்வாடி மையங்களுக்கும் தான் குரூப் லீடராக இருந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் சோதனை குழுவினர் திருமதி.M.நூர்ஜஹான் அவர்களின் மேஜை மீதிருந்த பிரவுன் மற்றும் ஊதா கலர் ஹேண்ட் பேக்கை எடுத்து சோதனை செய்தபோது அதில் Xmet-Trio ½ mg Mettomin 500 mg SR + Vogilbose 0.2 mg + Glimepiride ½ mg Chemist Notebook என்று முன்பக்க அட்டையில் பொறிக்கப்பட்ட அங்கன்வாடி மையங்களின் பெயர்கள் மற்றும் தொகைகள் நிறைய எழுதப்பட்டிருந்த spiral binding நோட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது வலது கால் அருகில் தரையில் வைத்திருந்த ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் என்ற பெயரிடப்பட்ட துணிப்பையைப் சோதனை செய்தபோது அதில் 500 ரூபாய் நோட்டுகள் பத்து மொத்தம் ரூ.5,000/- ஒரு கற்றையாகவும், 500 ரூபாய் நோட்டுகள் 6 மொத்தம் ரூ.3,000/- ஒரு கற்றையாகவும், 500 ரூபாய் நோட்டுகள் இரண்டு மொத்தம் ரூ.1,000/- ஒரு கற்றையாகவும், 100 ரூபாய் நோட்டுகள் இரண்டு மற்றும் 50 ரூபாய் நோட்டு ஒன்று மொத்தம் ரூ.250/- ஒரு கற்றையாகவும், ஆக மொத்தம் ரூ.9,250/- இருந்தது. மேலும் அவரிடம் வேறு பணம் ஏதாவது வைத்துள்ளீரா என்று கேட்டபோது அவர் தயக்கத்துடன் எதையோ மறைக்கும் உள்நோக்கத்துடன் தடுமாறிக்கொண்டே தன்னிடம் வேறு பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்ததால் அவரை மேற்படி அங்கன்வாடி மைய ஹாலை ஒட்டி வடக்கில் இருந்த அங்கன்வாடி மைய சமையல் அறைக்கு அழைத்துச் சென்று பெண் காவல் ஆய்வாளர் மற்றும் பெண் காவலர்கள் மூலம் தேக சோதனை செய்து பார்த்தபோது அவர் தனது ஜாக்கெட்டிற்குள் மறைத்து வைத்திருந்த ரூபாய் நோட்டுகளை பல கற்றைகளாக எடுத்து ஆஜர் செய்ததை, எண்ணிப் பார்த்தபோது அதில் 500 ரூபாய் நோட்டுகள் 13 ஆக ரூ.6,500/- ஒரு கற்றையாகவும், 500 ரூபாய் நோட்டுகள் 21 ஆக ரூ.10.500/- ஒரு கற்றையாகவும், 500 ரூபாய் நோட்டு ஒன்று தனியாகவும், 100 ரூபாய் நோட்டுகள் 2 தனியாகவும் ஆக மொத்தம் ரூ.17,700/- இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து கேட்டபோது தனது குரூப்பில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சம்பந்தப்பட்ட

அங்கன்வாடி பணியாளர்களது வங்கிக்கணக்கில் தற்போது உணவூட்டு செலவின தொகை மற்றும் வாடகை கட்டிடங்களில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்களுக்கான ஒன்பது மாத வாடகை நிலுவைத்தொகை ஆகியவற்றை மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளதாகவும், சேலம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர், திட்டம் – I திருமதி.பாலாம்பிகை அவர்கள் வாடகை நிதியிலிருந்து மேற்படி அங்கன்வாடி பணியாளர்களிடமிருந்து ஒவ்வொரு மாதத்திற்கும் ரூபாய் 800/– வீதமும், உணவு நிதியிலிருந்து ரூபாய் 500/– வீதமும் கமிஷனாக வசூல் செய்து கொடுக்கும்படி உத்தரவிட்டதால் அந்த உத்தரவை தனது குரூப்பில் உள்ள அங்கன்வாடி பணியாளர்களிடம் தெரிவித்திருந்ததாகவும். அதன்படி இன்று தன்னிடம் சில அங்கன்வாடி பணியாளர்கள் கொண்டு வந்து கொடுத்த தொகைகளை தான் ஆங்காங்கே பிரித்து மறைத்து வைத்திருந்ததாகவும் கூறினார். திருமதி.நூர்ஜஹானிடமிருந்த தொகைகள் ரூ.9,250/– மற்றும் ரூ.17,700/–ம் ஆக மொத்தம் ரூ. 26,950/– குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திட்டம் – I திருமதி.டி.பாலாம்பிகைக்காக கொடுப்பதற்காக அன்னதானப்பட்டி தொகுதி அங்கன்வாடிப் பணியாளர்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணம் என்று தெரிய வந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரது மேஜை மீதிருந்து 1st WHO Recommended ORS in Tetra Pack ELECTRAL Ready-To-Drink WHO ORS என்று முன் அட்டையில் பொறிக்கப்பட்ட ஸ்பைரல் பைண்டிங் நோட்டு ஒன்று, First Choice for Sedation free cold relief Hatric – 3 என்று முன் அட்டையில் பொறிக்கப்பட்ட சிறிய நோட்டு ஒன்று, Bharathi CEMENT என்று மஞ்சள் கலர் டைரியின் முன் அட்டையில் பொறிக்கப்பட்ட டைரி ஒன்று மற்றும் Future Mankind Aptimust Flora - BC என்று முன் பின் அட்டை இல்லாத டைரி மற்றும் Future Mankind Gastica – FIZ Instant Relief from Hyperacidity & Indigestion என்று முன்அட்டையில் பொறிக்கப்பட்டிருந்த நோட்டு ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் சோதனையின்போது திருமதி.நூர்ஜஹான் அவர்களின் மேஜை மீதிருந்த ஆவணங்களுக்கிடையிலிருந்து உரிமம் கோரப்படாத 20 ஐநூறு ரூபாய் நோட்டுகள் மற்றும் 5 நூறு ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.10,500/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு திருமதி. நூர்ஜஹான் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்புறம்

இருந்த இரும்பு மேசையின் மேல் புற டிராயரில் இருந்து விற்பனையாளரால் பள்ளி சத்துணவு மையத்திற்கு வழங்கப்படும் சத்துணவு வவுச்சர்களின் பூர்த்தி செய்யப்படாத தாள்களைக் கொண்ட வவுச்சர் புத்தகமும் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக திருமதி.நூர்ஜஹான் அவர்களிடம் ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. பின்னர் அவர் அருகில் இருந்த லைன்மேடு, காவலர் குடியிருப்பு அங்கன்வாடி மைய பணியாளர் S.சாந்தி அவர்கள் கையில் வைத்திருந்த மணமக்கள் S. சுரேஷ்குமார் M.C.A., J. மகாலட்சுமி M.A., B.Ed., என்றும் இதர விபரங்களும் பொறிக்கப்பட்டிருந்த திருமண தாம்பூலப்பையிலிருந்து 500 ரூபாய் நோட்டுகள் 13 ஆக ரூ.6,500/– ஒரு கற்றையாகவும், 500 ரூபாய் நோட்டுகள் 6 ஆக ரூ.3,000/– ஒரு கற்றையாகவும், 500 ரூபாய் நோட்டுகள் 7 ஆக ரூ.3,500/– ஒரு கற்றையாகவும் ஆக மொத்தம் ரூ.13,000/–ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகைகள் குறித்து திருமதி. S. சாந்தி அவர்களிடம் கேட்டபோது திருமண தாம்பூல துணிப்பையில் இருந்த ரூ.13,000/– ஆனது தனது குரூப்பில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு உணவூட்டு செலவின தொகை மற்றும் வாடகை கட்டிடங்களில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்களுக்கான ஒன்பது மாத வாடகை நிலுவைத்தொகை ஆகியவற்றை மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளதாகவும், சேலம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர், திட்டம் – I திருமதி.பாலாம்பிகை அவர்கள் வாடகை நிதியிலிருந்து மேற்படி அங்கன்வாடி பணியாளர்களிடமிருந்து ஒவ்வொரு மாதத்திற்கும் ரூபாய் 800/– வீதமும், உணவு நிதியிலிருந்து ரூபாய் 500/– வீதமும் கமிஷனாக வசூல் செய்து கொடுக்கும்படி உத்தரவிட்டதால் அந்த உத்தரவை தனது குரூப்பில் உள்ள அங்கன்வாடி பணியாளர்களிடம் தெரிவித்திருந்ததாகவும், அதன்படி இன்று அன்னதானப்பட்டி குரூப்பில் உள்ள அங்கன்வாடி பணியாளர்கள் இந்த முருகன் நகர் அங்கன்வாடி மையத்திற்கு வந்து கொடுத்த தொகைகளை தானும் திருமதி.நூர்ஜஹானும் வாங்கி வைத்ததாகவும், தன்னிடம் கொடுக்கப்பட்ட தொகைகளை தான் வாங்கி மேற்படி திருமண தாம்பூல பையில் வைத்ததாகவும், பின்னர் அலுவலக நேரம் முடிந்த பின்னர் தானும் திருமதி.நூர்ஜஹானும் தங்களிடம் கொடுக்கப்பட்ட தொகைகளை ஒன்றாக சேர்த்து குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திட்டம் – I திருமதி.டி.பாலாம்பிகையிடம் கொடுக்கவிருந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி தொகை ரூ.13,000/– ஆனது

குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திட்டம் – I திருமதி.டி.பாலாம்பிகைக்கு கொடுப்பதற்காக அன்னதானப்பட்டி தொகுதி அங்கன்வாடிப் பணியாளர்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணம் என்று தெரிய வந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக திருமதி.S.சாந்தி அவர்களிடம் விசாரித்து ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி சோதனை சமயத்தில் அளிக்கப்பட்ட தகவலின் பேரில் இந்த அங்கன்வாடி மையத்திற்கு வந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திட்டம் – I திருமதி.டி.பாலாம்பிகை அவர்களிடம் மேற்படி அங்கன்வாடி பணியாளர்கள் வைத்துள்ள கணக்கில் வராத தொகைகள் பற்றி கேட்டபோது அவர் அதுபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் தான் அவர்களை அன்னதானப்பட்டி குரூப் அங்கன்வாடி பணியாளர்களிடமிருந்து பணம் எதுவும் வசூலிக்கும்படி சொல்லவில்லை என்றும் தெரிவித்தார். இது சம்பந்தமாக திருமதி.டி.பாலாம்பிகை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. பின்னர் அன்னதானப்பட்டி நடுத்தெரு அங்கன்வாடி மைய அங்கன்வாடி பணியாளர் திருமதி.S.ஜெயலட்சுமி அவர்கள் கையில் வைத்திருந்த பிங்க் கலர் ரெக்சின் கைப்பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் ஒரு கத்தையாக பணம் இருந்தது. அதில் 500 ரூபாய் நோட்டுகள் 19 மற்றும் 100 ரூபாய் நோட்டுகள் 5ம் ஆக ரூ.10,000/– இருந்தது. இதுபற்றி திருமதி.ஜெயலட்சுமி அவர்களிடம விசாரித்தபோது State Bank of India வங்கியில் தனது அங்கன்வாடி மையத்தின் சேமிப்பு கணக்கு தனது பெயரில் உள்ளதாகவும் அந்த வங்கிக் கணக்கிலிருந்து தனது ATM மூலம் இன்று மாலையில் சற்று முன்புதான் ரூ.20,000/– எடுத்ததாகவும், அந்த தொகையில் தான் செலவழித்தது போக மீதிப்பணம் தான் இந்த ரூ.10,000/– என்றும் தெரிவித்தார். எனவே அந்த தொகை ரூ.10,000/– அவரிடமே திருப்பி வழங்கப்பட்டது. அவர் எடுத்த ரூ.20,000/–த்தில் செலவழித்த தொகை ரூ.10,000/– எதற்காக செலவழிக்கப்பட்டது என்று அவரிடத்தில் கேட்டபோது அவர் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். மேலும் சோதனையின்போது மேற்படி அங்கன்வாடி மைய நிரந்தா இருப்பு பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மருந்து மாத்திரை வினியோகம் சம்மந்தமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பாலாம்பிகை மூலம் அவரது அலுவலக மருந்து இருப்பு பதிவேட்டை அவரது அலுவலகத்திலிருந்து எடுத்து வரச் செய்யப்பட்ட மருந்து இருப்பு பதிவேடு மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதர விபரங்கள் இந்த திடீர்

சோதனையின்போது தயார் செய்யப்பட்ட எனது நடவடிக்கைகள் ந.க.எண். ஆ.கு.அ எண்.57/2019/ஆ1 நாள் **13.03.2019** மற்றும் நடவடிக்கை சமயத்தில் பெறப்பட்ட வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. அவைகள் இந்த புகாருடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.**50,450/–** மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். இந்த நிகழ்வு குறித்து உண்மை நிலை அறிய தக்க புலன் விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 14.3.2019 (V.Srinivasan).

Sir, Received the complaint at 16.00 hrs today on 14.3.2019 and registered a case in Salem Vigilance & Anti-Corruption Cr.No.4/AC/2019 u/s 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 and I took up investigation. Sd xxxx 14.3.2019 S.CHANDRAMOULI, ADSP, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.V.Srinivasan Deputy Inspection Cell Officer, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts is submitted to the Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(S CHANDRAMOULI),
ADDL. SUPDT. OF POLICE
V&AC, SALEM.